**பெண் :** முதல்முறை கிள்ளிப்
பார்த்தேன் முதல்முறை கண்ணில்
வேர்த்தேன் எந்தன் தாயின் கர்ப்பம்
தாண்டி மறுமுறை உயிர் கொண்டேன்
உன்னால் இருமுறை உயிர் கொண்டேன்

**பெண் :** முதல்முறை கிள்ளிப்
பார்த்தேன் முதல்முறை கண்ணில்
வேர்த்தேன் எந்தன் தாயின் கர்ப்பம்
தாண்டி மறுமுறை உயிர் கொண்டேன்
உன்னால் இருமுறை உயிர் கொண்டேன்

**பெண் :** முதல்முறை எனக்கு
அழுதிடத் தோன்றும் ஏன்
கண்ணீருண்டு சோகமில்லை
ஆமாம் மழையுண்டு மேகமில்லை

**பெண் :** கால்களில் கிடந்த
சலங்கையைத் திருடி
அன்பே என் மனசுக்குள்
கட்டியதென்ன

**ஆண் :** சலங்கைகள்
அணிந்தும் சத்தங்களை
மறைத்தாய் பெண்ணே
உன் உள்ளம் தன்னை
ஒளித்ததென்ன

**பெண் :** விதையொன்று
உயிர் கொள்ள வெப்பக்காற்று
ஈரம் வேண்டும் காதல் வந்து
உயிர் கொள்ள காலம் கூட வேண்டும்

**ஆண் :** ஒரு விதை உயிர்
கொண்டது ஆனால் இரு
நெஞ்சில் வேர் கொண்டது

**ஆண் :** சலங்கையே கொஞ்சம்
பேசு மௌனமே பாடல் பாடு
மொழியெல்லாம் ஊமையானால்
கண்ணீர் உரையாடும் அதில்
கவிதை அரங்கேறும்

**பெண் :** பாதையும் தூரம்
நான் ஒரு பாரம் என்னை
உன் எல்லை வரை கொண்டு
செல்வாயா

**ஆண் :** உடலுக்குள் இருக்கும்
உயிர் ஒரு சுமையா பெண்ணே
உன்னை நானும் விட்டுச் செல்வேனா

**பெண் :** தந்தை தந்த
உயிர் தந்தேன் தாய்
தந்த உடல் தந்தேன்
உறவுகள் எல்லாம்
சேர்த்து உன்னிடம் கண்டேன்

**ஆண் :** மொத்தத்தையும்
நீ கொடுத்தாய் ஆனால்
முத்தத்துக்கோர் நாள் குறித்தாய்

**பெண் :** முதல்முறை கிள்ளிப்
பார்த்தேன் முதல்முறை கண்ணில்
வேர்த்தேன் எந்தன் தாயின் கர்ப்பம்
தாண்டி மறுமுறை உயிர் கொண்டேன்
உன்னால் இருமுறை உயிர் கொண்டேன்

**பெண் :** முதல்முறை எனக்கு
அழுதிடத் தோன்றும் ஏன்
கண்ணீருண்டு சோகமில்லை
ஆமாம் மழையுண்டு மேகமில்லை